00005

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
முகாமைத்துவ கற்கைநெறி பீடம்

முகாமைத்துவ கற்கைகள் சிறப்புமாணிப்பட்டம்
மட்டம் 3
AFU 3572 – நுண்பாகப் பொருளியல்
இறுதிப் பரீட்சை – 2024 / 2025
காலம்: 03 மணித்தியாலங்கள்

*திகதி: 21.06.2025* *நேரம்: மு.ப 09.30 - பி.ப 12.30.*

அறிவுறுத்தல்கள்:
- இந்த வினாத்தாள் **ஆறு (06) வினாக்களை** கொண்டுள்ளது.
- ஏதேனும் **ஐந்து (05) வினாக்களுக்கு** விடையளிக்கவும். அனைத்து வினாக்களும் சமமான புள்ளிகள் கொண்டுள்ளன.
- உங்கள் **சுட்டெண்ணை** விடைத்தாளின் மேல் கொடுக்கப்பட்ட இடத்தில் எழுதவும்.
- இவ் வினாத்தாள் **4 தட்டச்சு** செய்யப்பட்ட பக்கங்களைக் கொண்டுள்ளது.
- விடைத்தாள்களை உங்கள் விடை புத்தகத்துடன் இணைக்கவும்.
- நிரல்படுத்தப்படாத கணிப்பான்களின் பயன்பாடு அனுமதிக்கப்படுகிறது.

**வினா இல. 01**

A) i. ஒரு பண்டத்தின் "கேள்வித்தொகை" மற்றும் "கேள்வி"ஆகியவற்றுக்கு இடையிலான வேறுபாட்டை விளக்குக.
ii. "வினைத்திறன் மிக்க கேள்வி" (Effective Demand) என்றால் என்ன? விளக்குக. **(06 புள்ளிகள்)**

B) எதிர்காலத்தில் சொத்துக்களின் விலை உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கேற்ப சந்தையில் கொள்வனவாளர்களும் விற்பனையாளர்களும் எவ்வாறு செயற்படுவர்? விளக்கப்படங்களைப் பயன்படுத்தி விளக்குக. **(05 புள்ளிகள்)**

C) பின்வரும் மாற்றங்கள் கொடுக்கப்பட்ட பண்டத்தின் சந்தையில் ஏற்படுத்தும் தாக்கத்தை விளக்கப்படங்களைப் பயன்படுத்தி விளக்குக.

i . பேக்கரி பொருட்களை தயாரிக்கத் தேவையான மூலப்பொருட்களின் விலை உயர்ந்துள்ளது, பேக்கரி பொருட்களுக்கான சந்தை.
ii. மின்சாரக் கட்டணத்தில் கடுமையான உயர்வு ஏற்பட்டுள்ளது, சூரிய மின்கலங்களுக்கான சந்தை.
iii. மஞ்சள் விவசாயத்தில் மேலும் மேலும் மக்கள் ஈடுபட்டுள்ளனர், மஞ்சளுக்கான சந்தை.
**(09 புள்ளிகள்)**

**வினா இல. 02**

A) i. ஒரு பண்டத்தின் விலைசார் கேள்விநெகிழ்ச்சியை நிர்ணயிக்கும் மூன்று முக்கிய காரணிகளை இனங்கண்டு, இவை ஒவ்வொன்றும் விலைசார் கேள்விநெகிழ்ச்சியின் தன்மையை எவ்வாறு பாதிக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகளைப் பயன்படுத்தி விளக்குக.
**(06 புள்ளிகள்)**

**ii.** பிஸ்கெட்டுகளின் விலைசார் கேள்விநெகிழ்ச்சி குணகம் **"-0.52"** ஆகவும், பீட்சாக்களின் விலைசார் கேள்விநெகிழ்ச்சி குணகம் **"-1.24"** ஆகவும் மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தப் பொருட்களிலிருந்து பெறப்படும் வருவாயை அதிகரிக்க வேண்டுமானால், இவ்விரு பொருட்களின் விலையை எவ்வாறு கையாள வேண்டும்? விளக்கப்படங்களைப் பயன்படுத்தி விளக்குக.

**(06 புள்ளிகள்)**

**B)** நெகிழ்ச்சி என்ற எண்ணக்கருவில் உள்ள உங்கள் அறிவைப் பயன்படுத்தி, பின்வரும் கூற்றுகளை நீங்கள் "ஒப்புக்கொள்கிறீர்களா" என்பதை விளக்குங்கள்.

**i.** ஒரு பண்டத்தின் பதிலீட்டுத்தன்மை (Substitutability) அதிகமாக இருந்தால், அதன் குறுக்கு கேள்வி நெகிழ்ச்சியின் (Cross Price Elasticity) பெறுமதி அதிகமாக இருக்கும்.

**ii.** உணவக உணவுகளின் வருமானம்சார் கேள்விநெகிழ்ச்சி குணகம் (Income Elasticity of Demand) **"+1.12"** ஆக மதிப்பிடப்பட்டுள்ளது, எனவே உணவக உணவுகள் அத்தியாவசியமான பொருளாகக் கருதப்பட வேண்டும். **(08 புள்ளிகள்)**

<u>வினா இல. 03</u>

**A)** **i.** எண்மானப்பயன் பகுப்பாய்வின் (Cardinal Utility Analysis) படி நுகர்வோர் சமநிலை (Consumer Equilibrium) எவ்வாறு விளக்கப்படுகிறது?

**ii.** குறைந்து செல்லும் எல்லைப்பயன் விதியை (Law of Diminishing Marginal Utility) விளக்கப்படங்களைப் பயன்படுத்தி விளக்குக. **(08 புள்ளிகள்)**

**B)** பின்வரும் அட்டவணையில் கொடுக்கப்பட்ட விவரங்களை கவனிக்கவும்.

| அளவு | 0 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| $TU_x$ | 0 | 48 | 92 | 132 | 168 | 200 | 228 | 252 | 272 |
| $TU_y$ | 0 | 84 | 162 | 234 | 300 | 360 | 414 | 462 | 504 |

பண்டம் **"X"** இன் மொத்த பயன்பாடு **(TUx)** மற்றும் பண்டம் **"Y"** இன் மொத்த பயன்பாடு **(TUy)** ஆகியவை மேலே குறிப்பிடப்பட்டுள்ளன.

பண்டம் X இன் விலை ரூ.4/= மற்றும் பண்டம் Y இன் விலை ரூ.6/= ஆகும், ஒரு நபரிடம் இவ்விரு பொருட்களுக்காக செலவிட ரூ.72/= காணப்படுகிறது. நுகர்வோர் திருப்தியை அதிகரிக்கும் அளவுகளை கண்டறிக. **(07 புள்ளிகள்)**

**C)** வரிசை சார் பயன் பகுப்பாய்வின் (Ordinal Utility Analysis) படி நுகர்வோர் சமநிலை (Consumer Equilibrium) எவ்வாறு விளக்கப்படுகிறது? விளக்கப்படங்களைப் பயன்படுத்தி விளக்கவும்.

**(05 புள்ளிகள்)**

<u>வினா இல.04</u>

**A)** **i.** . நிலையான உள்ளீட்டு காரணிகள் (Fixed Factor Inputs) மற்றும் மாறும் உள்ளீட்டு காரணிகள் (Variable Factor Inputs) ஆகியவற்றுக்கு இடையிலான வேறுபாட்டை உதாரணங்களைப் பயன்படுத்தி விளக்குக. **(04 புள்ளிகள்)**

ii. நீண்ட காலத்தை உள்ளடக்கிய கால அளவு எல்லா தொழில்களுக்கும் ஒரே மாதிரியாக காணப்படுமா? ஒரு உதாரணத்தைப் பயன்படுத்தி விளக்குக. **(05 புள்ளிகள்)**

**B)** கீழே கொடுக்கப்பட்டுள்ள ஒரு பண்டத்தின் குறுங்கால உற்பத்தி செயற்பாட்டைக் கவனிக்கவும்.

தொழிலாளர் – மாறும் காரணி, மூலதனம் – நிலையான காரணி; TP – மொத்த உற்பத்தி, AP – சராசரி உற்பத்தி, MP – எல்லை உற்பத்தி.

| $Q_L$ | 0 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| $TP_L$ | 00 | 04 | 10 | 24 | 36 | 45 | 49 | 49 | 48 |
| $AP_L$ | | | | | | | | | |
| $MP_L$ | | | | | | | | | |

i. அட்டவணையை நிரப்பவும் மற்றும் உற்பத்தி கட்டங்களை (Stages of Production) இனங்காண்டு விளக்கப்படத்தைப் பயன்படுத்தி விடையை விளக்குக.

ii. பகுத்தறிவு கொண்ட நிறுவனம் எந்த உற்பத்தி கட்டத்தில் தனது உற்பத்தியை வரம்பிட வேண்டும்? உங்கள் விடையை நியாயப்படுத்தவும்.

iii. மாறும் காரணியின் சராசரி உற்பத்தி (Average Product) மற்றும் எல்லை உற்பத்தி (Marginal Product) ஆகியவற்றுக்கு இடையிலான தொடர்பை இனங்காண்க. **(11 புள்ளிகள்)**

__வினா இல.05__

**A) i.** நிறைபோட்டித் தொழிலின் (Perfectly Competitive Industry) கேள்வி வளையி (Demand Curve) மற்றும் அந்தத் தொழிலில் உள்ள நிறைபோட்டி நிறுவனம் (Perfectly Competitive Firm) எதிர்கொள்ளும் கேள்வி வளையி இரண்டும் ஒரே மாதிரியானவையா? விளக்கப்படங்களைப் பயன்படுத்தி விளக்குக. **(05 புள்ளிகள்)**

**ii.** நிறைபோட்டித் தொழிலில் இயங்கும் நிறுவனங்கள், தாம் சந்தையில் விற்கும் பொருளின் விலையை தீர்மானிக்க முடியுமா? விளக்கப்படங்களைப் பயன்படுத்தி விளக்குக. **(05 புள்ளிகள்)**

**B) i.** குறுங்காலத்தில் இழப்பை எதிர்கொள்ளும் நிறைபோட்டி நிறுவனம், சந்தையில் தொடர்ந்து இயங்க முடியுமா? விளக்கப்படங்களைப் பயன்படுத்தி விளக்குக. **(05 புள்ளிகள்)**

**ii.** நீண்ட காலத்தில் நிறைபோட்டித் தொழிலின் ஒதுக்கீட்டு திறன் (Allocative Efficiency) மற்றும் உற்பத்தி திறன் (Productive Efficiency) பற்றி கருத்து தெரிவிக்க. **(05 புள்ளிகள்)**

__வினா இல.6__

**A) i.** தனியுரிமைத் தொழிலில் (Monopolistic Industry) நுழைவதற்கு கடுமையான தடைகள் (Strict Barriers to Entry) காணப்படுவது அதன் பண்பாகும். அவை யாவை? **(05 புள்ளிகள்)**

**ii.** ஒரு தனியுரிமை நிறுவனம் தனது பொருளின் விலையையும் உற்பத்தி செய்யப்பட வேண்டிய வெளியீட்டையும் ஒரே நேரத்தில் தீர்மானிக்க முடியுமா? விளக்கப்படத்தைப் பயன்படுத்தி விளக்குக.

(04 புள்ளிகள்)

B) i. உதாரணங்களை வழங்கி, தனியுரிமைப் போட்டித் தொழிலின் (Monopolistically Competitive Industry) பண்புகளை விளக்குக. **(05 புள்ளிகள்)**

ii. தனியுரிமைப் போட்டி மற்றும் சிலருரிமை (Oligopoly) சந்தைகளில் உள்ள நிறுவனங்கள், தங்கள் போட்டி நிறுவனங்களுடன் விலையல்லாத போட்டி முறைகளை (Non-Price Competitive Methods) எவ்வாறு பயன்படுத்துகின்றன? உதாரணங்களைப் பயன்படுத்தி விளக்குக.
**(06 புள்ளிகள்)**

- முழு பதிப்புரிமையுடையது -